செய்தி வெளியீடு எண்:1052 நாள்:07.11.2021

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தி.ரு எ.வ.வேலு அவர்கள் சென்னை முழுவதும் மழைநீர் தேங்கி உள்ள பல்வேறு பகுதிகளில் நீர் வடிவதற்கான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நேற்று இரவு (06.11.2021) முதல் சென்னையில் வரலாறு காணாத தொடர் மழையினால் பாதிக்கப்பட்டு சென்னை முழுவதும் மழைநீர் தேங்கி வெள்ளக்காடாக உள்ளது. அதிகமான மழைநீர் தேங்கிய உள்ள பகுதிகளான அண்ணாசாலை, வெலிங்டன் தியேட்டர் பகுதி, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை பெருநகர காவல் ஆணையர் அலுவலகம், தினத்தந்தி அலுவலகம், எழும்பூர் இரயில்வே நிலையம், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி, கோயம்பேடு, அரும்பாக்கம், வடபழனி, ஒலிம்பியா ஈக்காடுதாங்கல், கிண்டி, SIET, ஆலந்தூர், மீனம்பாக்கம் விமான நிலையம், பல்லாவரம், குரோம்பேட்டை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தி.ரு எ.வ.வேலு அவர்கள் விரைந்து நீர் வடிவதற்கான பணிகளை பார்வையிட்டு அங்குள்ள பொறியாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும், வெள்ளநீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கியுள்ள நீரை உடன் டீசல் மோட்டார்கள் வைத்து அப்புறப்படுத்தவும், சாலைகயில் ஏற்படும் குழி, பள்ளங்கள் மற்றும் நொடிகள்(Paches) சீர்செய்து போக்குவரத்து தடையின்றி செல்வதற்கு ஏற்றவாறு செப்பணிட உத்தரவிட்டுள்ளார்கள்.

மரங்கள் சாய்ந்தால் மற்றும் இடிபாடுகள் ஏதேனும் ஏற்படின் போர்கால அடிப்படையில் அகற்றிட போதுமான கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்தார். மேலும், பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றிட உத்திரவிட்டுள்ளார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9